ஸ்ரீ ஹரி:

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

## தெய்வீக மாதப் பத்திரிகை

மஹாமந்திரம்:
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

Published by
V. Sankaran
on behalf of
Guruji Sri Muralidhara
Swamigal Mission,
Chennai - 83.

வேணு : 13 மே 2008 கானம் : 10

இந்த இதழில்...

**ஆத்ம குணங்களை அறிவோம் ... 2**
எட்டு ஆத்ம குணங்கள் கௌதம சூத்திரத்திலிருந்து
**கலிக்கு மஹாமந்திரமே மருந்து ... 3**
**ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம் கேள்வி ... 6**
ஹரித்வார் - குருத்வார் - நாமத்வார்
**ஊசலாடும் மனது ... 8**
முடிவே இல்லாத தொடர்கதையே ஆகும்
**ஸ்ரீ ஸ்வாமிஜியுடன்
சென்று வந்தீர்களா! ... 12**
**அடுத்து வருபவை ... 32**
**அறிவியல் ஆராய்ச்சி தேவை ... 10**



நமது மதுரபுரி ஆஸ்ரம வளாகத்திலுள்ள
ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் மற்றும்
வீரஆஞ்சநேயர் சன்னதியில்,
காலையில் ஸ்ரீமத் ராமாயண பாராயணம்
மாலையில் உபன்யாசம்
தேதி : 8-5-2008 முதல் 16-5-2008 வரை
இதில் கலந்துகொண்டு பெருமாளின்
விசேஷ அருள் பெறலாம் வாரீர்.

ஸ்ரீ ஹரி:

# ஆத்ம குணங்கள்

எட்டு ஆத்மகுணங்கள் கௌதம சூத்திரத்தில் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது.

1. दया सर्वभूतेषु - எல்லா ஜீவராசிகளிடத்திலும் கருணை
   தயா ஸர்வ பூதேஷு காட்டல்.
2. क्षान्तिः - பொறுமை
   க்ஷாந்தி:
3. अनसूया - பிறர் வாழ்வது கண்டு சகிக்காமல்
   அனஸூயா இல்லாமை.
4. शौचम् - சரீரம், மனம் இவைகளின் சுத்தம்.
   சௌசம்
5. अनायासम् - செய்ய வேண்டும் என்பதை லகுவாக
   அனாயாசம் **பா**வித்தல்.
6. मङ्गलम् - எப்போதும் நல்லதையே சொல்வது.
   மங்களம்
7. अकार्पण्यम् - கோழைத்தனமின்மை.
   அகார்பண்யம்
8. अस्पृहा - தன்னுடையதல்லாததில்
   அஸ்ப்ருஹா ஆசையின்மை.

வேத வியாசர் பெற்றெடுத்த பதினெட்டு கன்னிகைகளில், ஸ்ரீமத் பாகவதமே, அன்பு, பணிவு, பக்தி, லலிதம், சாத்வீகம், லாவண்யம், கருணை, ம்ருதுத்வம் போன்ற உத்தம குணங்கள் உடைய கன்னிகை ஆகும். இவளைக் கல்யாணம் செய்து கொள்பவர்களுக்கு ஞானம், வைராக்கியம் போன்ற சீர்களை வியாசர் கொடுத்தனுப்புவார். ஆனால், ***இந்தக் கன்னிகை உனக்கு கிடைக்க வேண்டுமானால், குரு பார்வை உன் மீது விழவேண்டும்.***

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், சமீபத்தில், கலியுக தர்மமான நாமகீர்த்தனம் பற்றிக் கூறினார்கள். அவற்றில், சிலவற்றை கீழே தருகின்றோம்.

1. சநாதன தர்மம் என்றால் சடங்குகளை மட்டுமே கற்பனை செய்துகொள்ள வேண்டாம். அப்படிச் செய்யும் சடங்குகளால் ஏற்படக்கூடிய பலன்தான் நாமசங்கீர்த்தனம். நாம சங்கீர்த்தனம் சநாதனமான தர்மமே!

*2. எவ்வளவோ தெய்வங்கள்; அந்தந்த தெய்வங்களுடைய நாமங்கள் உள்ளன. ஏன், பகவான் ஸ்ரீ ஹரிக்கே ஆயிரத்து எட்டு நாமங்கள் உள்ளன. அப்படி இருக்க, ஏன் மஹாமந்திரம் என்றால், கலியினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு இந்த மஹாமந்திரத்தைத்தான் ஜபம் செய்ய வேண்டும் என்பது சாஸ்திரத்தின் எல்லையான உபநிடதத்தின் தீர்மானம். ஆகவே, கலிக்கு மஹாமந்திரமே மருந்து!*

3. அப்படியானால், நாம் சடங்குகளையோ, மற்ற தியானம், யோகம் போன்றவற்றையோ, மற்ற தெய்வங்களின் வழிபாடுகளையோ விட்டுவிட வேண்டும் என்று பொருள் இல்லை. மஹாமந்திர கீர்த்தனம் ஒன்றே போதும் என்றபோதிலும் கூட, பழக்கமாக உள்ளவற்றை எதையும் விடாமல், அத்துடன் மஹாமந்திர கீர்த்தனம் செய்யலாம். அப்படி செய்வதால், நீங்கள் செய்து வரும் மற்ற சாதனைகளும், முழு அளவில் பயன் தரும். ஏன் என்றால், கலியின் தோஷம் அதில் ஏற்படாமல் நாமகீர்த்தனம் பார்த்துக்கொள்ளும்.

4. நாமகீர்த்தனத்திற்கு என்று தனி நேரம் ஒதுக்க வேண்டிய கட்டாயம் இல்லை. எந்த வேலை செய்துகொண்டும், நடந்தும், அமர்ந்தும், நின்றும், படுத்தும், குளித்தும், குளிக்காமலும் சொல்லலாம்.

5. இதற்காக, நாம் யாரிடமும் சென்று கற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. தவறாக போய்விடுமோ என்ற அச்சமும் இல்லை. ஏன் என்றால், இதில் தவறாக போவதற்கு வாய்ப்பே இல்லை!

***6. இது நாமாக காட்டிய புதிய வழி அல்ல. ஆழ்வார்கள், நாயன்மார்கள் மற்றும் எண்ணற்ற மஹான்கள் காட்டிய வழியே! மறந்ததை நியாபகப்படுத்திக்கொள்கின்றோம்.***

7. காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ பகவந்நாம போதேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளே காண்பித்த வழி இது!

8. எல்லோராலும் பின்பற்றக்கூடியது, எளிமையானது, இனிமையானது, சுலபமானது!

9. சாஸ்திர சம்மதமானது.

10. பெரியப் பலனைத் தரக்கூடியது!

11. உலக வாழ்க்கை, பரலோக வாழ்க்கை இரண்டிலும் சுகத்தைத் தரக்கூடியது.

12. இறைவனுக்கு மிகவும் பிடித்தமானது!

13. நேரடியாக இறைவனிடம் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள உதவுவது.

14. நாமகீர்த்தனம் செய்பவன், செய்கின்ற இடம், நாடு, அரசன், எல்லோரும் புனிதமாகிவிடுவார்கள்.

15. இறை வாழ்க்கை என்ற பெயரில் ஏமாற்றுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லாத ஒரு வழி.

16. ஒரு வாதத்திற்காக எடுத்துக்கொண்டால், நாமகீர்த்தனம் செய்வதால் பரலோகம் என்று இருந்தால் பிழைத்தோம். ஒருக்கால், அது இல்லையென்றாலும், எதையும் நாம் இழக்கவில்லை.

*17. கிறிஸ்துவ, இஸ்லாமிய, சீக்கிய மத நூல்களாலும் நாம ஜபம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.*

18 ஒலியில் இருந்து உலகம் உண்டாயிற்று. அந்த பரப்ரும்மத்தின் ஆதாரமான ஒலி இறைவனின் நாமமே.

19. தாகம் அடங்க வேண்டும் என்றால் நீர் அருந்த வேண்டும். பசி அடங்க வேண்டும் என்றால் உணவு உட்கொள்ள வேண்டும். மனதிற்கு ஓய்வு வேண்டும் என்றால் தூக்கம் வேண்டும். வியாதி போகவேண்டும் எனறால் மருந்து உட்கொள்ள வேண்டும். இவ்வுலக வாழ்க்கைக்கு பொருள் வேண்டும். பரலோக வாழ்க்கைக்கு அருள் வேண்டும்.

இவையெல்லாம் வேண்டும் என்றால் நாமகீர்த்தனம் வேண்டும்.

மேற்கண்ட நாம சங்கீர்த்தனத்தின் பெருமைகளை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கூறக் கேட்டேன். அதை உங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளேன்.

**(தொடரும்)**

**- டாக்டர் ஆதிமூர்த்தி பாக்யநாதன்**

***Sri Hari :***

***Pranams to the Lotus feet of***
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**

**M/s. BUDDIES INFOTECH PRIVATE LIMITED**
*Web Designing and Application Development*

Old No. 22, New No. 34, Sriman Srinivasa Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone No. 044-421 44 662
e-mail : contact@buddiesinfotech.com

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

*கேள்வி: நம்முடைய மதமானது எவ்வளவோ சிறிய சிறிய நியமங்களைக் கூட கடுமையாக நமக்கு விதித்திருக்கும்பொழுது, மஹாபுருஷர்கள் பலர், எந்த நியமங்களையும் பின்பற்றாதது ஏன்?*

பதில் : ஒரு சிறிய குளம், குட்டை, ஏரி இவைகளுக்கு ஒரு தடுப்பு அவசியம். அப்படி இல்லை என்றால் அந்த நீரானது வெளியே வந்து வீணாகிவிடும். ஆனால், சமுத்திரத்திற்கு அணை தேவையா? அல்லது அதற்கு ஒரு தடுப்புதான் போட முடியுமா? நாம் எல்லோரும் குளம், குட்டை போன்றவர்கள். ஆகவே, நமக்கு பல நியமங்கள் தேவை. அவர்களோ கடல் போன்றவர்கள். அதனால், எந்த நியமங்களும் அவர்களுக்குத் தேவையில்லை.

*கேள்வி: நாமத்வார் என்ற பெயர் தாங்கள் ஆரம்பிக்கும் நாமகீர்த்தனம் நடக்கும் எல்லா இடத்திற்கும் பொதுவான பெயரா?*

பதில் : இமயமலை சாரலில், கங்கைக் கரையில், ஸ்ரீ ஹரியை அடைவதற்கு தவம் செய்யும் முக்கியமான இடம் ஒன்று உள்ளது. அதற்கு 'ஹரித்வார்' என்று பெயர். இந்து மதம், புத்தம், சமணம் இவைகளால் பாதிக்கப்பட்டு, கோழைத்தனமாக ஆன பிறகு, இந்து மதத்தை வீர மதமாக மாற்றிய பெருமை சீக்கியர்களையே சாரும்! அவர்களும், குருவின் வாயிலாகத்தான் இறைவனை அடைய முடியும் என்பதை உணர்ந்திருந்தார்கள். அவர்களுடைய வழிபாட்டுத் தலங்களுக்கு 'குருத்வார்' என்று பெயரிட்டார்கள். நாமோ இறை நாமத்தின் வாயிலாகத்தான் இறைவனை அடைய முடியும் என்ற உண்மையை உணர்ந்திருப்பதால் இதற்கு 'நாமத்வார்' என்று பெயர் வைத்துள்ளோம். ஹரித்வார் - குருத்வார் - நாமத்வார்.

நம்முடைய சைதன்ய மஹாபிரபு நாமபிக்ஷா கேந்திராவின் சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் நாம-த்வார் (நாமவாயில்) காலை 8-11, மாலை 5-8 மணியளவில் இயங்கி வருகின்றது என்பதை பக்தர்களின் வசதிக்காக தெரிவித்துக் கொள்கின்றோம்.

| இடம், பொறுப்பாளர், தொலைபேசி | விலாசம் |
|---|---|
| மதுரை<br>திரு. நரஹரிதாஸ்<br>போன் : 094860 42399 | 4, சத்யசாய் நகர் மெயின் ரோடு,<br>கே.ஜி.எஸ். கல்யாண மண்டபம்<br>எதிரில், டி.வி.எஸ். நகர்,<br>பழங்காநத்தம், மதுரை-625 003. |
| சேலம்<br>திரு. சதுர்புஜதாஸ்<br>போன் : 094452 72437 | சொர்ணபுரி,<br>சி 69, பிள்ளையார் கோயில்<br>தெரு, சேலம் - 636 004. |
| சிவகாசி<br>திரு. குமாரவேல்,<br>பவானி அக்கா<br>போன் : 098430 88826 | புது எண். 112, ப எண். 106,<br>பி.கே.எஸ். தெரு,<br>சிவகாசி -626 123. |
| பெரியகுளம்<br>திரு. ஹரே ராம<br>கிருஷ்ணகுமார்<br>போன் : 9245439344 | பெருமாள் கோவில் தெரு,<br>தென்கரை, பெரியகுளம், |
| தூத்துக்குடி<br>திரு. கதிரேசன்<br>போன் : 0461 - 2324467 | 16, ஆண்டாள் தெரு,<br>ரயில்வே நிலையம் அருகில்,<br>தூத்துக்குடி - 628 002. |
| நாசிக்<br>திரு. அபூர்வ ஹிராய் | KBH Vidyalaya அருகில்<br>Pavan Nagar, CIDCO New Nasik |

*பிருந்தாவனமே நான் வசிக்கும் வீடு*
*நாமகீர்த்தனம் செய்பவரே என் சொந்தமும், பந்தமும்*

**- ஸ்ரீ ஸ்வாமிஜி**

# ஊசலாடும் மனது

- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

மனிதன் தவறு செய்கிறான். எப்படி? முதல் முதலாக தவறு செய்வதற்குப் பயப்படுவான். பல முயற்சிகள் எடுப்பான். ஆனால், தயங்கித் தயங்கி பின்வாங்கிவிடுவான். பிறகு, ஒரு முறை எப்படியோ அந்த தவற்றை செய்துவிடுவான். அப்படி, முதல் முறை தவற்றை செய்து முடித்தவுடன், வெட்கம், பயம், சுயபச்சாதாபம் எல்லாம் வரும். ஆனால், அடுத்த முறையும் செய்வான். பிறகு, மீண்டும் மீண்டும் அதே தவற்றைச் செய்வான். அப்பொழுதெல்லாம் கவலைப்படமாட்டான். இப்பொழுது, ''யாராக இருந்தாலும் இப்படித்தான் செய்வார்கள்'' என்று நினைப்பான். ''காலம் இப்படி உள்ளது, நான் என்ன செய்வது?'' என்று நினைப்பான். **''தெய்வம்தானே எல்லாவற்றிற்கும் காரணம் என்றால், நான் தவறு செய்வதற்கும் தெய்வம்தான் காரணம்''** என்பான். ''தவறு செய்வதற்கும் ஒரு தைரியம் வேண்டும்'' என்பான்.

இப்படியாக இவன் செய்து செய்து பழகிய தவறுகளால் உடல் ஆரோக்கியம் கெடலாம். அல்லது ஆபத்துக்கள் வரலாம். அல்லது அவனுக்கே அலுப்புத் தட்டி தன்னைப் பார்த்தே ஒரு வெறுப்பும் ஏற்படலாம். அப்பொழுதெல்லாம், தெய்வத்தின் முன்பாகப் போய் நிற்பான். அழுவான். ''உனக்கு எல்லையில்லாத சக்திகள் இருக்கும் பொழுது என்னை மாற்றுவது உனக்கு என்ன பெரிய கஷ்டமா?'' என்பான். ''உண்மையில் நீ இருக்கின்றாயா? இருந்தால், என்னை மாற்று பார்ப்போம்!'' என்பான். கடைசியாக, ''இந்த முறை, இந்த ஆபத்து அல்லது சிக்கல் அல்லது வியாதியிலிருந்து காப்பாற்றிவிடு. பிறகு, நீ என்னைப் பார். புதியதாகப் பிறந்தவன் போல் வாழ்வேன்'' என்று சூளுரைப்பான். கதறுவான், அழுவான், சத்தியம் செய்வான்.

சிறிது சிறிதாக அவன் எதிர்பார்த்த துன்பம் வராமல் மறையும். சிறிது நாட்கள் சும்மாயிருப்பான். பிறகு, வழக்கம்போல் ஆரம்பித்துவிடுவான். அவனுடைய மனசாட்சி, அவனைப் பார்த்து, ''மீண்டும் தவறான பாதையில் செல்கின்றாயே? கஷ்டம் வந்தால்

என்ன செய்வாய்?'' என்று கேட்கும். அவன் அதற்கு, ''கஷ்டத்தை எதிர்பார்த்துக்கொண்டே ஒருவன் வாழ முடியுமா என்ன? வரும்போது வரட்டும். பார்த்துக்கொள்ளலாம்'' என்பான். 'சரி! இவனுக்கு என்னதான் கதி' என்று கேட்கின்றீர்களா? ஒரு மஹாபுருஷன் வாயிலாக பகவன் நாமாவும், பகவானிடம் பிரேமையும் உண்டானால்தான் இவனால் இதிலிருந்து வெளியில் வரமுடியும். இதைத்தான் ஸ்ரீமத் பாகவதம், 6-வது ஸ்கந்தத்தில், அஜாமிளன் கதையைச் சொல்லும்பொழுது

*க்வசித் நிவர்ததே அபத்ராத் - க்வசித் சரதி தத் புந:*

என்கின்றது. அதாவது, ''சில சமயங்களில் மங்களம் இல்லாத காரியங்களில் பிரவேசிக்கிறான். மீண்டும், அதிலிருந்து விலகுகிறான். மீண்டும், அதில் பிரவேசிக்கிறான்.'' இது அவனுடைய வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் முடிவே இல்லாத தொடர்கதையே ஆகும்.


புதிய வெளியீடுகள் - **Books in English**

**Simple Questions, Simple Answers**
His Holiness Sri Sri Muralidhara Swamiji expounds the highest Truths, in a short and sweet manner.

**God**
A very small 'close to the heart' pocket book takes the concept of God to the heart.

**The Birth of Srimad Bhagavatam**

**Blissful Blossoms**
A compilation of saying of Sri Sri Swamiji.

**Srimad Bhagavatam - An Introduction**

**As it Strikes Me**
A collection of Sri Sri Swamiji's unique thoughts that enthralls an open mind.

**Sri Bhoopadeva**
Life sketch of a great saint who was instrumental in bringing back Srimad Bhagavatam to this world.

Contact Ph : 044-24895875 for queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs

# பாலகர்களுக்கு ஒரு கதை (நமக்கும்தான்)

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் வெளிநாட்டிற்குச் சென்று வந்திருந்தார். அவரிடம், ''நீங்கள் சென்ற நாடுகளில் என்ன என்ன பார்த்தீர்கள்? ஏதாவது சுவாரஸ்யமான, புதுமையான விஷயங்கள் உண்டா?'' என்று ஆவல் பொங்கக் கேட்டேன். அதற்கு அவர், ''அங்கு உள்ள கலாச்சாரம், விஞ்ஞான வளர்ச்சி, புதுமைகள், எல்லாவற்றையும் மீறி ஒரு தனி நபர் என்னை மிகவும் கவர்ந்துவிட்டார்'' என்று சொன்னார்.

''அப்படி என்ன புதுமையை அவரிடம் கண்டீர்கள்?'' என்றேன். ஒருக்கால், அவருடைய அழகு, கம்பீரம் என் நண்பரைக் கவர்ந்திருக்குமோ? என்று நினைத்தேன். நிச்சயமாக அதைப்பற்றித் தான் பேசுவார் என்றும் நினைத்தேன். ஆனால் - அவரோ, ஒரு வயதான இளைஞரைப் பற்றிப் பேசினார். குள்ளமான உயரமான மனிதன் என்பதுபோல் வயதான இளைஞர் என்கின்றாரே! என்று நினைத்தேன். என்னுடைய மனதின் ஓட்டத்தை கண்டுபிடித்தது போல், உடனே அதற்கு பதிலளித்தார்.

''அவருக்கு வயது எண்பது இருக்கும். ஆனால், மனதினால் இளைஞர். அவர் என்னுடைய Guide. நானே ஒரு நாளில் பதினெட்டு மணி நேரம் உழைப்பேன். ஆனால், அவரோ, என்னுடன் பதினெட்டு மணி நேரமும் உடன் இருந்து உழைத்துவிட்டு, பிறகு ஒரு மருத்துவமனைக்கும் சென்று சேவை செய்வார். முகம் சுளிக்கவே மாட்டார். எப்பொழுதும் இனிமையாகப் பேசுவார். என்னுடைய பையை நான் தூக்குவதற்கு விடவே மாட்டார். அவரைப் பார்த்து அப்படியே ஆடிப்போய் விட்டேன். இந்த வயதில் இப்படி ஒருவரா? என்று பிரமித்துவிட்டேன்.

நான் நம் நாட்டிற்கு கிளம்பும்பொழுது, அவர், என்னிடம், ''மீண்டும் தாங்கள் என் நாட்டிற்கு வரவேண்டும்'' என்றார். நான், ''நிச்சயமாக வருகின்றேன். உங்கள் அன்பு எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது'' என்றேன். அதற்கு அவர் சொன்ன பதிலைக் கேட்டு வியப்பின் உச்சிக்கே சென்றுவிட்டேன். அவர், ''நீங்கள்

கேட்ட சில கேள்விகளுக்கு எனக்கு பதில் தெரியாதது வெட்கமாக உள்ளது. நான் அதைப் பற்றிய ஒரு படிப்பிற்கு University-யில் சேர்ந்துள்ளேன். அடுத்த முறை நீங்கள் வரும்பொழுது என்னுடைய பணியை இன்னும் சிறப்பாகச் செய்ய விரும்புகிறேன். அதற்காகத்தான் நீங்கள் வரவேண்டும்'' என்றாரே பார்க்கலாம்!'' என்று என் நண்பர் என்னிடம் கூறினார்.

**குழந்தைகளே! நம்முடைய வேதம், இதிகாசம், புராணம், போன்றவற்றுள் எவ்வளவு விஞ்ஞான உண்மைகள் புதைந்துள்ளன! ஆனால், என்ன பயன்? நவீனமான கண்டுபிடிப்புகளான Light, Fan, Electricity, Car, Aeroplane போன்ற எவற்றிற்கும் நம் நாட்டிலிருந்து பங்கேற்பே இல்லை. ஏன்? நடுவில் நாம் சற்றே சுணங்கி விட்டோம். பழங்கதைகளைப் பேசிப் பேசியே புதிய முயற்சிகளை விட்டுவிட்டோம். விடுமுறை, ஓய்வு என்ற வார்த்தைகளே சோம்பேறிகளுடைய வார்த்தை. ஒரு வேலையைச் செய்து செய்து அலுத்துவிட்டால் வேறு வேலையை செய்வதுதான் ஓய்வு, அல்லது ஒரே இடத்தில் வேலை செய்து அலுத்துவிட்டால் வேறு இடத்திற்கு மாறி வேலை செய்வதுதான் ஓய்வு. நமக்கோ நேரம் போதவில்லை. அப்படியிருக்க, பலருக்கு, பொழுதுபோகாமல் இருப்பதுதான் வியப்பாக உள்ளது. ஆகவே, இந்த விடுமுறையில் சரித்திரம், விஞ்ஞானம், ஆன்மீகம், கலை அறிவைத் தூண்டக்கூடிய பயிற்சி நூல்கள் போன்றவற்றை தினமும் படித்து விடுமுறையை உபயோகமுள்ளதாக ஆக்குங்கள்.**

**– டாக்டர் ஆதிமூர்த்தி பாக்யநாதன்**

---

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடம்

ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், மஹாரண்யம், மதுரபுரி, ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாள் அன்னதானக் கூடத்தில் தினமும் நண்பகல் 12 மணியளவில் கிராமப் பொதுமக்களுக்கு அன்னதானம் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

மஹாரண்யம், மலைப்பட்டு, அழகூர் மற்றும் பல கிராமங்களில் இருந்து வரும் பொதுமக்கள் இந்த அன்னதானத்தினால் பயனடைகின்றனர்.

**– டிரஸ்டிகள்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியுடன்...

**சென்னையில்...**

சிறிது நாட்களாகவே ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு கழுத்து வலி இருந்து வந்தது. அவர்களுடைய பக்தர் ஒருவர் கூறியதின் பேரில் சென்னையில் உள்ள ஆயுர்வேத மையத்தில் தங்கி மார்ச் 7-ஆம் தேதி முதல் ஒரு வாரக்காலத்திற்கு சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள். அந்த சமயத்தில், வெளியூர் பயணம், உபன்யாசம் எதுவும் மேற்கொள்ளவில்லை. சிகிச்சைக்குப் பிறகு, மீதி நேரங்களில், ஸ்ரீமத் பாகவத தியானத்திலும், பாராயணத்திலும் இருந்து வந்தார்கள். மார்ச் 14-ஆம் தேதியன்று, சில யோகாசனங்களைக் கற்றுக்கொண்டு, ஆலப்பாக்கம் சென்று, அங்கு பொதிகைத் தொலைக்காட்சிக்கு வேண்டிய ரிகார்டிங் கொடுத்துவிட்டு, இரவு அங்கு தங்கினார்கள்.

மறுநாள், காலையிலிருந்து மாலை வரை ஆலப்பாக்கத்தில் புதிய புத்தகத்திற்கான கட்டுரைகளை எழுதினார்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும், ஒரு காரியத்தை எடுத்தால், அது முடியும் வரை அதில் தம் முழு கவனத்தைச் செலுத்துவது என்பது ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் இயல்பாகும். அதுபோலவே, மாலை வரை எழுதியவாறே இருந்தார்கள்.

அன்று, உள்ளங்கை தோல் அலர்ஜிக்காக சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள். மாலையில், பிரேமிகபவனத்தில் தரிசனமும், நாம கீர்த்தனமுமாக அன்றைய பொழுது சென்றது.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. விடுமுறை நாட்களில், தரிசனத்திற்காக பக்தர்கள் அதிகமாக வருவது வழக்கம். எத்தனை பேருக்கு தரிசனம் கொடுத்தாலும், அனைவரின் குறைகளையும் ஆதரவுடன் கேட்டு ஆறுதல் அளிப்பது ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் வழக்கம். அன்றும் அப்படியே இருந்தது. மாலையில், ஆலப்பாக்கத்தில், புதிய புத்தகத்திற்கான கட்டுரைகளை ஸ்ரீ ஸ்வாமிஜி சொல்ல

அன்பர் ஒருவர் குறிப்பெடுத்துக்கொண்டார். இரவு, மதுரபுரி ஆஸ்ரமம் சென்று அங்கு தங்கினார்கள்.

மறுநாள் ஏகாதசி. உள்ளங்கை தோல் அலர்ஜி காரணமாக, மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனின் பூஜையை ஸ்ரீ யோகேஷ்பட் செய்ய, தரிசனம் முடிந்த பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி, மாலையில் பிரேமிகபவனம் திரும்பினார்கள்.

அன்று மாலையில், அமெரிக்காவில் பல ஆண்டுகளாக இருந்து, நம் குருநாதர் மீது மிகுந்த பிரியத்துடன், அவர்தம் பணிகளை சிரமேற்கொண்டு செய்துவரும் திரு. சங்கர் வெங்கட்ரமணியின், சென்னை புதுமனை புகுவிழாவில் நடைபெற்ற நாம கீர்த்தனத்தில் கலந்துகொண்டு பிரேமிகபவனம் திரும்பினார்கள்.

மறுநாள் காலையில், பிரேமிகபவனத்தில் தரிசனம். வெகுநாட்களாகவே ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீநிவாசபெருமாளை தரிசனம் செய்ய ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு அவா. அதனால், அன்று மதியம், ஆஸ்திரேலிய பக்தர் கௌதமுடன், கீழ்திருப்பதி முதலான பல இடங்களுக்குச் சென்று நள்ளிரவே ஆலப்பாக்கம் திரும்பினார்கள். அலைச்சல்தான். இருப்பினும், அன்பர் உள்ளம் திருப்தியுற விரும்பினார் போலும்!

**குருவாயூரில்...**

மறுநாள், மார்ச் 19-ஆம் தேதியன்று, பங்குனி உத்திரமும், வெள்ளிக்கிழமையும் சேர்ந்த திருநாள். பிரேமிகபவனத்தில் ஸ்ரீ ரங்கநாதர், ஸ்ரீ ரங்கநாயகி கல்யாண உத்ஸவம். மறுநாள், குருவாயூர் பயணம். குருவாயூரில் திரு. ராஜன்-மைதிலிராஜன் தம்பதியினர் சத்சங்க பணிக்காக கொடுத்திருந்த இல்லத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி தங்கினார்கள்.

குருவாயூர், குருவாயூரப்பன் என்றாலே ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு அலாதிப் பிரியம். பாகவதம் என்றாலும் அலாதி பிரியம். குருவாயூரில், குருவாயூரப்பன் கோவிலில், ஸ்ரீமத் பாகவதம்

என்றால் கேட்கவும் வேண்டுமோ! சப்தாஹத்திற்கான ஏற்பாடுகளை திரு. சேதுராமன் - கீதா தம்பதியினர் செய்திருந்தனர்.

நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பல ஊர்களிலிருந்து கலந்துகொண்டனர். தினமும், காலையில் பாகவத பாராயணம், மதியம் பாகவத உபன்யாசம், மாலையில் விஷ்ணுஸஹஸ்ரநாமம், இரவு நாமகீர்த்தனம். இவ்வாறு ஒரு வாரக்காலம் சத்சங்கம்.

முதல் நாள் மஹாப்ரபு ஜயந்தீ. பிராம்மண சமூஹ மண்டபத்தில் மாலையில் இரண்டு மணி நேரம் பக்தர்களுடன், ‘ஹரே ராம...’ மஹாமந்திர கீர்த்தனம் பாடினார்கள். பிறகு, மஹாப்ரபுவின் ‘சிக்ஷாஷ்டகம்’ எனும் சுலோகங்களைப் பாடினார். மற்றொரு நாள், நாமகீர்த்தனத்தின்பொழுது, ராஸத்தில் கண்ணன் எண்ணற்ற ரூபங்களுடன், ஒவ்வொரு கோபிக்கும் ஒரு கண்ணனாக நின்றதை வர்ணிக்கும் வண்ணம், ‘அங்கொரு கண்ணன், இங்கொரு கண்ணன்’ என்ற புதிய கீர்த்தனத்தை பாடினார்கள்.

குருவாயூர் கோவிலில், காலையிலும், மாலையிலும், உத்ஸவ மூர்த்தியை, அலங்காரம் செய்யப்பட்ட யானைகளில், சாமரம், குடை, பஞ்ச வாத்யங்களுடன் புறப்பாடு செய்து பிரகாரத்தை மும்முறை வலம் வரும் ஸ்ரீவேலி என்ற நித்யோத்ஸவ தரிசனம் ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு மிகவும் விருப்பமானது. முன்பு, கேசவன் என்ற யானை 50 வருடங்களாக கைங்கர்யம் செய்தது போலவே இப்பொழுது பத்மநாபன் என்ற யானை ஸ்ரீவேலியில், புறப்பாடு செய்வதைக் கண்டு ஆனந்தித்து, அதை பக்தர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள்.

சப்தாஹத்தில், கஜேந்திர மோக்ஷம், அம்ருத மதனம், வாமனாவதாரம், மத்ஸ்யாவதாரம், அம்பரீஷ சரித்திரம், ராமாவதாரம், கிருஷ்ண ஜனனம் என்று ஒன்றன் பின் ஒன்றாக எல்லாவற்றையும் ஸ்ரீ ஸ்வாமிஜி மிகவும் ரசத்துடன் சொல்ல, பக்தர்கள் அனுபவித்தார்கள். ஒருநாள் குருவாயூர் அருகிலுள்ள திருப்பரையாரில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ ராமரை தரிசனம் செய்தார்கள்.

***Why fear when krishna is here* - Sri Swamiji**

ஒரு நாள் இரவு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் குருவாயூரப்பனை ஏகாந்தமாக தரிசித்து, பாகவதத்தில் வரும் வேணு கீதமும், ஆத்ம நிவேதனமும் அவன் முன்பு பாடி, குருவாயூரப்பனுக்கு நெய் பாயசம் நிவேதனம் செய்தார்கள். மற்றொரு நாள் கோவில் பிரகாரத்தில் சம்ப்ரதாய பஜனையும், அஷ்டபதியும் பாடிக் கொண்டு பாகவதர்களுடன் குருவாயூரப்பனை வலம் வந்தார்கள்.

மார்ச் 26ஆம் தேதி அன்று, தம் சிஷ்யர்கள் ஸ்ரீதத்வமஸி கனபாடிகள், திரு. ரவி பாகவதர், திரு. பாலாஜி பாகவதர் மற்றும் பூர்ணிமாஜீ அவர்களை தசம ஸ்கந்தத்தில் ஒவ்வொரு கட்டத்தை உபந்யாஸம் செய்யச் சொல்லி, அதை கேட்டு மகிழ்ந்தார்கள்.

பூர்த்தி தினத்தன்று, தீர்த்த கலசம் ஊர்வலமாக கோவில் திருக்குளமான நாராயணஸரஸ் வரை நாமகீர்த்தனத்துடன் எடுத்துச் செல்லப்பட்டு அவப்ருத ஸ்நானம் செய்யப்பட்டது. பிறகு, ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், குருவாயூரிலிருந்து கிளம்பி, மாலை திருச்சூரில், ஸ்ரீ ராம்ஜி அவர்கள் இல்லத்திற்குச் சென்று, இரவு, கோயமுத்தூரில் கோவைபுதூர் என்னுமிடத்தில் ஸ்ரீ சுப்ரமணியம் அவர்கள் இல்லத்தில் தங்கி பெங்களூர் சென்றார்கள்.

### பெங்களூரில்...

மார்ச் 28-ஆம் தேதியன்று, பெங்களூர் சென்று கல்கரே, ராமமூர்த்தி நகரில், ஏப்ரலில் கும்பாபிஷேகம் நடக்கவிருக்கும் ஸ்ரீ சுந்தர ஹனுமான் திருக்கோவிலுக்குச் சென்று, ஏற்பாடுகளைப் பார்வையிட்டார்கள். (கும்பாபிஷேக சிறப்புச் செய்திகள் அடுத்த இதழில்!) தள்ளாத வயதிலும், சத்சங்கத்தில் ஈடுபட்டு, ஸ்ரீ ஸ்வாமிஜியின் நாமப் பணியில் தம்மை அர்ப்பணித்தவர்கள் பெங்களூரைச் சேர்ந்த திரு. நாராயணஸ்வாமி - லீலா தம்பதியினர். திருமதி லீலா நாராயணசாமி அவர்கள், சமீபத்தில், வீட்டில், கீழே விழுந்து, எலும்பு முறிவு ஏற்பட்டு, சத்சங்க அன்பர்களால் சிகிச்சைப் பெற்று வந்தார்கள். அவர்களது இல்லம் சென்று ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆறுதல் கூறினார்கள்.

அண்மையில், பெங்களூரின் பல பகுதிகளில், நமது பெங்களூர் கேந்திரா அன்பர்கள், பல கூட்டுப் பிரார்த்னைகளை நடத்தியுள்ளனர். அவர்களது சேவையில் மனம் நெகிழ்ந்து போன



''ஹரே ராம...'' மஹாமந்திர நகர சங்கீர்த்தனம்

இடம் : ஸ்ரீரங்கம் தேதி: 12-04-2008

ஸ்ரீ ஸ்வாமிஜி, மாலையில், ஆஸ்திக சமாஜத்தில் நடைபெற்ற சத்சங்கத்தில் அவர்களைப் பாராட்டினார்கள். பெங்களூர் ஸ்ரீ அனந்தராமன், மல்லேஸ்வரம் திரு. சங்கரன் இல்லங்களுக்குச் சென்றார்கள். மார்ச் 29ஆம் தேதி காலையில் ஸ்ரீ சுந்தர ஹனுமார் திருக்கோயிலுக்குச் சென்று, அங்கு பாராயணம், ஜபம், கீர்த்தனம் செய்து மதியம் தருமபுரிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

**தருமபுரியில்...**

தருமபுரிக்கு வந்தவுடனேயே, அன்பர்கள், ஸ்ரீ ஸ்வாமிஜியை சூழ்ந்துகொண்டு 'தருமபுரி நகரம், ஸ்ரீ ஸ்வாமிஜிக்காக காத்துக் கொண்டிருக்கின்றது' என்று அகமகிழ்ந்து கூறினார்கள். தொடர்ந்து நாமகீர்த்தனம் செய்துவரும் கங்காதரன் என்னும் ஆட்டோ ஓட்டுநரை அறிமுகப்படுத்தியபொழுது, மிகவும் மனம் மகிழ்ந்தார்கள். ***''வீடு வீடாக சென்று நாமகீர்த்தனம், நாமப் பிரசாரம் செய்வது எப்படி?''*** என்பதை நமது சத்சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்களை தருமபுரி பக்தர்களுடன் கலந்து பேசச் சொன்னார்கள்.

தருமபுரியில், மாலை 6.30 மணியளவில் டான் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில், நமது கேந்திரா மற்றும் யோகராம ஸ்ரீ வித்யா பீடம் சார்பாக நடைபெற்ற மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு, நாமமஹிமைப் பற்றிப் பேசினார்கள். இதில் 500க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு நாமகீர்த்தனம் செய்தார்கள். இரவு, திருவள்ளுவர் நகரில் தங்கினார்கள்.

மார்ச் 30ஆம் தேதி கோட்டைக் கோயிலுக்கும், பரவாசுதேவர் கோயிலுக்கும் சென்றுவந்து ஸ்ரீ ராகவேந்திரர் கோயிலில் பிரஹ்லாத சரித்திரம் சொன்னார்கள். ரேணுகா பரமேஸ்வரி மற்றும் காமாக்ஷி கோவிலுக்கும் சென்றார்கள். இரவு உபன்யாசத்தில், சனாதன தர்மம் பற்றியும், 'சிவ' நாம மஹிமை பற்றியும் பேசினார்கள். ''நாமகீர்த்தனத்தை முதன்முதலில் ஆரம்பித்தவன் நந்தனே'' என நந்தனாரைப் பற்றி சொல்வதுண்டு.

மறுநாள், பிரேமிகபவனத்தில், மாலையில், சத்சங்கத்தில் பத்ராசல ராமதாசர் கீர்த்தனைகளை ஸ்ரீ பாலாஜி பாகவதர் பாடியதைக் கேட்டு ரசித்தார்கள். டோலோத்ஸவத்திற்குப் பிறகு, பிரேமிகபவனத்தில் தங்கினார்கள்.

**ஹைதராபாத்தில்...**

ஏப்ரல் 1-ஆம் தேதியன்று, ஹைதராபாத், திரு. ரவிச்சந்திரன் - திருமதி லதா அவர்கள் இல்லத்திற்குச் சென்றார்கள். ஸ்ரீ சாந்தீபனி குருகுல சேவா ட்ரஸ்ட் (A.P.) பாடசாலையைத் திறம்பட நடத்திவரும் அதன் முக்கிய அத்யாபகர், ஸ்ரீ ராகவேந்திர சர்மாவை ''என் வரை எதுவும் வராமல் தாமாகவே அனைத்தையும் பார்த்து சுமுகமாக பாடசாலையை நடத்தி வருபவர்'' என்று பாராட்டினார்கள். நாமத்வார் ஒருங்கிணைப்பாளர்களைச் சந்தித்தார்கள். ஓங்கோல் சென்று, அங்கு இரவு தங்கி, மறுநாள் ஏகாதசி பூஜைக்காக மதுரபுரி திரும்பினார்கள். மாலை பிரேமிகபவனம்.

மருநாள், திருவண்ணாமலை செல்லவிருந்தது, உடன் வருபவருடைய, உறவினரின் உடல்நலம் குறைவால் ரத்து செய்யப்பட்டது. அன்று பிற்பகல், தம் தமையனார் இல்லம் சென்று, சமீபத்தில் பிறந்த அவரது பேரக் குழந்தையை வாழ்த்தினார்கள்.

மறுநாள், ஏப்ரல் 4-ஆம் தேதி, மாலையில் சத்சங்கத்தைச் சேர்ந்த சிறுவர்கள் ஸ்ரீநாத், விக்னேஷ் அவர்களை உபன்யாசம் செய்யச் சொல்லி அதைக் கேட்டு ரசித்தார்கள். பாலகனாக இருந்தாலும், பாகவத உபன்யாசம் செய்பவருக்கு உரிய மரியாதையை அளிக்க வேண்டும் என்று வியாச பகவான் கூறியிருப்பதை மேற்கோள் காட்டி ஸ்ரீநாத் பேசியதை மிகவும் ரசித்தார்கள். டோலோத்ஸவத்திற்குப் பிறகு பிரேமிகபவனத்தில் தங்கினார்கள்.

**திருச்சி ஸ்ரீரங்கத்தில்...**

ஸ்ரீரங்கத்தில், திரு. S. ராமச்சந்திரன், ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் - ஸ்ரீரங்கம் பாடசாலையை சிரத்தையுடன் நிர்வகித்து வருகிறார்கள். அதன் இரண்டாம் ஆண்டு பூர்த்தியை ஒட்டி, ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் நடைபெற்றது. ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ஏப்ரல் 5-ஆம் தேதியன்று, மதியம், திருச்சியில் பாடசாலைக்குச் சென்று, அன்று திரு. சுவாமிநாதன் அவர்கள் இல்லத்தில் தங்கினார்கள்.

காலை - பாடசாலையில் பாராயணம், இரவு - ராயர் தோப்பு, ரங்க மண்டபத்தில் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம். பல ஊர்களிலிருந்து, எண்ணற்றோர் கலந்துகொண்டனர். மாஹாத்மியம் சொல்லும்போது, ''ஸ்ரீரங்கத்தில், நம் பெருமாள் கற்பகவ்ருக்ஷ

வாஹனத்தில், உத்சவ காலங்களில் எழுந்தருளும் இம்மண்டபத்தில், சப்தாஹ சிரவணம், ஸ்ரீரங்க மஹாக்ஷேத்திரத்தில் சப்தராத்ரிகள் வாசம், சப்த பிரகார நாமவலம் இதெல்லாம் பகவத் கிருபையினால் தானே நமக்கு சித்தித்துள்ளது'' என்றார் ஸ்ரீ ஸ்வாமிஜி.

அன்று இரவு, மதுரையில் புதியதாக துவக்கப்பட்டிருக்கும் நாமத்வார் சென்றடைந்து, அங்கு தங்கினார்கள். மறுநாள், மதுரை நாமத்வாரில், நடைபெற்ற சத்சங்கத்தில், ஐம்பதிற்கும் மேற்பட்ட பக்தர்களுடன் நாமகீர்த்தனம் செய்தார்கள். மதுரையிலிருந்துப் புறப்பட்டு, கெங்குவார்பட்டி ஸ்ரீ கோபிகிருஷ்ணனின் தாயார் மருத்துவம் பெற்றுவரும் தேம்பாவனி மருத்துவமனைக்குச் சென்று, அவர்கள் உடல்நலம் பெற ஆறுதல் கூறினார்கள். ஸ்ரீரங்கம் திரும்பி, உபன்யாசம் நிகழ்த்திய பிறகு, பாடசாலையில் இரவு தங்கினார்கள்.

ஏப்ரல் 8-ஆம் தேதியன்று, காலையில், பாராயணத்திற்குப் பிறகு, உறையூர் அருகில் கட்டப்பட்டு வரும் திருக்கோயிலுக்குச் சென்று, திரும்பி வரும் வழியில், திருவெள்ளரையில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ புண்டரீகாக்ஷப் பெருமாளை தரிசனம் செய்தார்கள். நாள் முழுவதும் நாமகீர்த்தனம் நடைபெறும் பல திருக்கோயில் களுக்கும் இடங்களுக்கும் சென்று வந்தும் சற்றும் களைப்படையாமல் அப்பொழுதும் முகத்தில் புத்துணர்ச்சியுடன் , குழுமியிருந்த பக்தர்களை சந்தித்தார்கள். மறுநாள் காலையில், கொள்ளிடத்தில் நீராடி, பாடசாலை திரும்பி, பாராயணம் செய்து, பிறகு ஸ்ரீரங்கநாதரை தரிசிக்கச் சென்றார்கள். எந்தவொரு விஷயத்தையும் ஸ்ரீ ஸ்வாமிஜி ரசிப்பதே அலாதி. அதுபோலவே அன்றும். ரங்கநாதனுக்கு அபய ஹஸ்தத்தில் சாற்றப்பட்டிருந்த வஜ்ர கவசத்தையும், பாதத்தில் கொஞ்சும் கிங்கிணிகளையும் ரசித்தார். அன்று, பாடசாலைக்கு வந்து பாலகோபாலனுக்கு பலவித பக்ஷணங்களை நிவேதனம் செய்து பக்தர்களுக்கு விநியோகம் செய்தார்கள். நாமகீர்த்தனம் செய்பவர் அழைத்தால் ஸ்ரீ ஸ்வாமிஜி உடனே ஒப்புக்கொண்டுவிடுவார்கள். ஸ்ரீ சத்யநிதாய்தாஸ் நடத்தி வரும் புத்தகக் கடைக்கும், இல்லத்திற்கும் சென்று, ராயர் தோப்பிற்குத் திரும்பி, ஸ்ரீமத் பாகவதம் பிரவசனம் நிகழ்த்தினார்கள். இரவு, சேலம் சென்று நாமத்வாரில் தங்கினார்கள்.

மறுநாள் காலையில், அங்கு நடைபெற்ற சத்சங்க நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ஸ்ரீரங்கம் திரும்பினார்கள். மாலையில், ''முதியோர் இல்லம்'' அமைய இருக்கும் இடத்திற்குச் சென்று, பிறகு, ராயர் தோப்பிற்கு வந்து, துருவ சரித்திரத்தை புதுப்புது **பா**வங்களுடன் உருக்கமாக கூற, 800க்கும் மேற்பட்டோர் அதைக் கேட்டு மகிழ்ந்தார்கள். இரவு, ஸ்ரீரங்கம் பாடசாலையில் வாசம்.

மறுநாள், ஏப்ரல் 11-ஆம் தேதியன்று, ஸ்ரீ வாசுதேவ பஜனாஸ்ரமத்தில், ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் அவர்களைத் தரிசனம் செய்து, தீர்த்தப் பிரசாதம் பெற்று, பாடசாலைக்குத் திரும்பினார்கள். மாலையில், கணபதி திருக்கோயில், ''சுமங்கலி மஹால்'' சென்றார்கள். பிறகு, திரு. வேணுகோபால் அவர்கள் இல்லத்திற்குச் சென்று, ராயர் தோப்பிற்குத் திரும்பி உபன்யாசம் நிகழ்த்தினார்கள். நடைபெறவிருக்கும் நகர சங்கீர்த்தனம் பற்றி சொன்னார்கள்.

**பூர்த்தி தினத்தன்று, காலை 5.45 மணிக்கே ஸ்ரீரங்கம் ராஜகோபுரம் அருகே உள்ள ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபுவின் பாத மண்டபத்திற்கு வந்து சேர்ந்து மஹாமந்திர கீர்த்தனம் செய்துகொண்டு பக்தர்களுக்காக காத்திருந்தார்கள்.** சற்று நேரத்திற்கெல்லாம் திரளான பக்தர்கள் கூடிவிட்டனர். காலை 6.25க்கு நகர சங்கீர்த்தனத்தை ஆரம்பித்து சித்திர வீதி நான்கிலும் வழியாக மஹாமந்திர கீர்த்தனத்துடன், 500-க்கும் மேற்பட்ட பக்தர்களுடன் வலம் வந்து ராஜகோபுரம் வழியாக காலை 7.10-க்கு திருக்கோயிலுக்குள் நுழைந்து, கோயில் பிரகாரங்களை வலம் வந்தது, பிறகு மண்டபத்தில் நின்று, ஆனந்தமாக நர்த்தனம் செய்து மஹாமந்திரம் பாடினார்கள். பிரகாரத்தில் ஒரு முனையில் நின்று பார்த்தால், மறுமுனை வரை ஒரே அன்பர் கூட்டம். நாம கோஷம் வேறு. இம்மாதிரி வைபவங்களுக்காகவே, ரங்கநாதன் அசையாது சயனித்திருக்கிறார் போலும்! பரமபத வாசல் முன்பு ஒரு கணம் நின்றார்கள். (கூட வந்தவர்கள் அனைவருக்கும் பரமபதத்தை கேட்டிருப்பாரோ) பிறகு, தாயார் சன்னதியில், காலை 7.30 மணிக்கு நகர சங்கீர்த்தனத்தைப் பூர்த்தி செய்தார்கள். பிறகு, பாடசாலைக்குத் திரும்பி பாராயண பூர்த்தியில் கலந்து கொண்டு, அன்று இரவு சென்னை திரும்பினார்கள்.

- தொகுப்பு 'அன்பர்கள் குழு'

# மாலே மணிவண்ணா-61

- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

*சென்ற இதழ் தொடர்ச்சி*

4. நான்காவது அசுப பாவனை : அசுபம் என்பது அமங்கலம் என்னும் பொருளுடையது. உடலை அசுபமாகப் பாவித்து அதன்கண் விருப்பம் செய்யாது விடுதல் என்பது இந்த பாவனையின் கருத்தாகும்-இதைப் பயிலுபவர் இந்த உடம்பு குற்றக் கொள்கலம்; சாணிக்குவியலில் தோன்றி வளரும் புழுக்களைப் போலக் கருப்பப்பையில் உண்டாகின்றது; அசுத்தத்தின் இடமாக இருப்பது. திருப்பிப் பார்த்தால் சகிக்க ஒண்ணாத துர்நாற்றம் வீசுவது; அருவருப்பான நீர்க்கசிவு ஒன்பது ஓட்டைகளின் வழியாக ஒழுகுவது; இதன் நிலையான காலஅளவு ஒரு நிமிஷமே; மின்னல், நுரை, நீரிற் போட்ட உப்பு, காய்ந்த புல்லிற்பட்ட நெருப்பு, கடல் அலை, புல்முனைப் பனித்துளி போலப் பிறந்தபோதே சாகும் தன்மைஉடையது என்று உடம்பின் அருவருப்பையும் நிலையின்மையும் **பா**வித்து வெறுத்தலாகும்.

5. ஐந்தாவது உபேக்ஷா பாவனை : உபேக்ஷா-விருப்பு வெறுப்பின்றி இருத்தல்; எல்லா உயிர்களையும் சமமாகப் **பா**வித்தல். மற்ற நான்கு பாவனைகளிலும் மிக உயர்ந்தது இது. சம சித்தத்துவம் என்று இதற்கு ஒரு பெயர் உண்டு.

இவற்றுள் அசுப பாவனை நீங்கலாக ஏனைய நான்கு பாவனைகளும் உயர்வு பற்றிப் பிரம்மவிகார பாவனை என்று கூறப்படும். இவை மஹாப் பிரம்மாக்களால் அனுஷ்டிக்கப்படுவன என்று பௌத்த சமயம் கூறும்.

இவற்றுள் அசுப பாவனையால் காமத்தை ஒழிக்க என்றவாறு உடம்பினை அநித்தியம், துக்கம், அநான்மா, அசுகி என்று **பா**வித்துக்கொண்டே இருந்தால் உடம்பின் மேல் ஆசை உண்டாகாது; உடம்பால் ஆசை அனுபவிக்க முயலார்.

மைத்திரி பாவனை முதலிய மூன்றாலும் கோபத்தை ஒழிக்க என்றவாறு இரக்கமும், அன்பும், கருணையும் உண்டானால் மகிழ்ச்சி நிலைக்கும். அங்கே சினத்துக்கு இடம் இல்லை அல்லவா?

ஐந்தாவதாக உள்ள உபேக்ஷா பாவனையால் மயக்கத்தைப் போக்குக என்றவாறாம்-

ஆக, ஐந்து பாவனைகளாலும் காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்றும் கெடவே அவர்களுக்குப் பிறவி இல்லை என்றவாறாம்.

*''காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்*
*நாமம் கெடக்கெடும் நோய்''*

என்ற திருக்குறள் இங்கு நினையத் தக்கது-இங்கு நோய் என்றது உயிர்க்குத் துன்பம் தரும் பிறவி என்னும் தீரா நோய் கெடும் என்பதாகும்.

ஞான நூற்பொருளைக் கேட்டலும், சிந்தித்தலும், இடைவிடாது **பா**வித்தலும் (அதாவது தெளித்தலும்) ஆகிய ''சுருதி, சிந்தனா, பாவனா, தரிசனை'' என்ற நான்கினாலும் சித்த மாசறத் துடைத்து சித்தத்தை அழகுறுத்தியவர்கள் எம் பெருமானிடத்தில் ஈடுபட்ட பாகவதர்கள் எனப்படுவர். இதனையே

செவி முதலாகிய பொறிகள் ஐந்தையும் மயக்கம் இல்லாதபடி நீக்கி, மைத்திரி, கருணை, முதிதை, இகழ்ச்சி (அசுப) என்னும் நான்கினாலும் சித்தத்தைக் குற்றமறுத்துத் தம்மைச் சமாதியாகிய (உபேக்ஷா-விருப்பு வெறுப்பின்றி இருத்தல்) ஒருநெறிக் கண்ணே சேர்ந்துள்ள அன்பர் என்று பரிபாடல்

*''ஐந்து இருள் அறநீக்கி நான்கின் உள் துடைத்துத்தம்*
*ஒன்று ஆற்றுப்படுத்த நின் ஆர்வலர்''*

என எடுத்து இயம்பியது.

(ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகள் நான்கின்-நான்கு பாவனைகளால், உள்-சித்தம், தம் ஒன்று-தம்மை சமாதி என்னும் ஒரு நெறியில், ஆற்றுப்படுத்த -வழிப்படுத்திச் சேர்த்த)

ஐந்து இருள் என்பதற்கு அவிச்சை, அகங்காரம், அவா, விழைவு, வெறுப்பு என்னும் ஐந்து என்றும், பஞ்சக்கிலேசம் என்று வடமொழியிற் கூறப்படும் இந்த ஐந்தையும் அறநீக்கி; 'நான்கின்' அதாவது சித்தம், அகங்காரம், மனம், புத்தி என்னும் நான்கு

அந்தக் காரணங்களையும் துடைத்துத் தம் ஒன்று-தம் ஒன்றாகிய உயிரை, ஆற்றுப்படுத்த-வீடுபேறு அடையும் வழியிலே செலுத்திய நின் ஆர்வலர் என்றும் இவ்வரிகளுக்குப் பொருள் கூறலாம்.

இத்தகைய பாகவதோத்தமர்களாகிய ஞானவான்கள் எம்பெருமான் திருப்புகழ்களை விரித்துப் பேசுகிறார்கள். வேதம், புருஷஸூக்தம், உபநிடதம், விஷ்ணு சகஸ்ரநாமம் என்றும், பாகவதம், இராமாயணம், பாரதம் என்றும் பகவானிடத்தில் அன்புடையவர்களால் வணங்கித் துதித்து சொல்லப் பெறுகின்ற புகழ்கள் எல்லாம் எம்பெருமானே உனக்கு இயல்பாகப் பொருந்தியுள்ளனவே. இதில் வியப்பதற்குரியது ஒன்றும் இல்லை என்பதை நாங்கள் அறிந்திருக்கின்றோம்.

ஆனாலும், அவர்கள் கூறியவற்றுள் சிலவற்றை விட்டும், கூட்டியும், குறைத்தும், அங்கும் இங்குமாக மாறுபடக் கூறியும் நாங்கள் கூறுவதைக் கேட்டு நீ நகுதலும் (சிரித்தலும்) எங்களுக்கு ஒரு தகுதியாகிவிடுகிறது. எம்பெருமானைச் சிறிது நேரம் சிரித்து மகிழ வைப்பதற்கு எம் சொற்கள் பயன்படுவனவாதலன நாங்கள் உன்னைப் புகழ்ந்து கூறுதலையும் விடுவோம் இல்லை என்று முகவுரையாகச் சொல்லி எம்பெருமானைப் புகழத் தொடங்குகிறார் பரிபாடல் ஆசிரியர்.

*''ஐந்து இருள் அற நீக்கி நான்கின் உள் துடைத்துத்தம்*
*ஒன்று ஆற்றுப் படுத்த நின் ஆர்வலர் தொழுது ஏத்தி*
*நின்புகழ் விரித்தனர் கிளக்குங்கால் அவை நினக்கு*
*இறும்பூது அன்மை நற்கு அறிந்தேம் ஆயினும்*
*நகுதலும் தகுதி ஈங்கு ஊங்கு நிற் கிளப்ப''*
***(இறும்பூது-வியப்பு, நற்கு-நன்றாக, நகுதலும்-சிரித்தலும்,***
***ஈங்கு ஊங்கு-அங்கும் இங்குமாக மாற்றி)***

**(தொடரும்)**

வேதத்திற்கே ஆதாரமான வேதவியாசரும், பக்திக்கே ஆதாரமான நாரதரும் கலந்து செய்த ஒரு கிரந்தமான ஸ்ரீமத் பாகவதம், வைதீக தர்மம், பாகவத தர்மம் இரண்டினுடைய சாரமாகும்.

**- ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

# பிருந்தாவனமும் நந்தகுமாரனும்

டாக்காவைச் சேர்ந்த ஸ்ரீ க்ருஷ்ண கோவிந்கோஷ் என்பவரின் புதல்வன் ஸ்ரீ ராதாரமணகோஷ். உயர்கல்வி பெற்ற பின் இவர் தேவேந்த்ரநாத் டாகூர் அவர்களின் எஸ்டேட்டில் செயலாளராக பொறுப்பேற்றார். பின்னர் ஸ்ரீபுரா எனும் ஊரின் அரசர் மஹாராஜா வீரசந்த்ர பஹாதுர் என்பவரின் அந்தரங்க செயலாளராகச் சேர்ந்தார்.

**வந்தது வானரம் அல்ல. ஒரு சாது.**

மஹாராஜா வீரசந்த்ர பஹாதுர், சைதன்ய மஹாப்ரபுவின் பக்தர். ராதாரமணகோஷ் மிகவும் உயர்ந்த பண்புகள் மற்றும் அதிமேதாவியாகவும், மிக மன உறுதி உடையவராகவும் இருந்தார் என்றபோதிலும், அவருக்கு இவைகளைக் குறித்து கர்வம் இருந்தது. மேலும், வைஷ்ணவர்களிடம் அவருக்கு வெறுப்பு இருந்தது. இதன் காரணம், அவர்கள் 'பணிவு' எனும் ஒழுக்கத்தை வலியுறுத்தியதே!

மஹாராஜா அடிக்கடி ப்ருந்தாவன யாத்திரை மேற்கொள்வார். அங்குள்ள அவரது வீட்டில் தங்கிக்கொண்டு வைஷ்ணவ மஹாபக்தர்களுடன் சத்சங்கம் செய்வார். ஒருநாள், அவர் மாடியிலுள்ள தனது அறையில் அமர்ந்துக்கொண்டு வைஷ்ணவர் களுடன் பகவத் விஷயமாக உரையாடிக்கொண்டிருந்தார். வெளி (வராண்டாவில்) தாழ்வாரத்தில் விலையுயர்ந்த நிறைய பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் மிகவும் விலைமதிப்புள்ள ஒரு ஷால் (Shawl) ஒன்றும் இருந்தது. வெளியில் ஒரு மரத்தின் மேல் குரங்கு ஒன்று அமர்ந்துகொண்டிருந்தது. திடீரென்று வராண்டாவில் குதித்த அந்த குரங்கு, அந்த ஷாலை எடுத்துக்கொண்டு மரத்தின் உச்சிக்குச் சென்றுவிட்டது.

ராதாரமணரும் மற்ற ஊழியர்களும் அந்த குரங்கினிடமிருந்த பொன்னாடையை திரும்பிப் பெற எவ்வளவோ முயற்சித்தார்கள். ஆனால், அவர்களின் கூச்சலும் மிரட்டலும் அந்தக் குரங்கை பாதிக்கவேயில்லை. அவர்கள் பழங்கள் மற்றும் நிறைய

தின்பண்டங்களை வீசி எறிந்தார்கள். ஆனால், அந்த குரங்கிற்கு அவையெல்லாம் ஒரு பொருளாகவே தென்படவில்லை. அது மும்முரமாக அந்தப் பொன்னாடையை தன் பற்களால் கடித்துக் கடித்து துப்பிக்கொண்டிருந்தது. இந்த ரகளையின் சப்தத்தைக் கேட்டு மஹாராஜாவே அங்கு வந்துவிட்டார். வராந்தாவிற்கு வந்த அவர் அந்த மரத்தின் மீது அமர்ந்திருந்த குரங்கையே உற்று நோக்கிக்கொண்டிருந்தார். ராதாரமணகோஷும் மற்ற சிப்பந்திகளும், அவர் மிகவும் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பதையும் அவர் கண்களிலிருந்து கண்ணீர் துளிகள் சிந்துவதையும் கவனித்தனர். அவர், இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றார் என்று அனைவரும் உணர்ந்தபோதும், எதனால் அவர் கண்கள் பனித்தன என்று அவரைக் கேட்க யாருக்கும் தைரியமில்லை.

ராதாரமணருக்கு ராஜாவின் மனப்பான்மைக் குறித்து பெரும் அவா எழுந்தது. அவரிடமே கேட்டுவிடவேண்டும் என்று தக்கத் தருணத்தை எதிர்பார்த்திருந்தார். மாலை வேளையில் மஹாராஜாவின் அறைக்குள் சென்றார் ராதாரமணர். அங்கு ராஜா தனிமையில் அமர்ந்திருந்தார். அவரை வணங்கிவிட்டு, ''மஹாராஜா! எங்கள் கவனமின்மையால் தங்களுடைய ஒரு விலைமதிப்புள்ள பொன்னாடையை இன்று இழக்க நேர்ந்துவிட்டது. இதைக் குறித்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம். ஆனால், தாங்கள் இதை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. எங்களிடம், நீங்கள் இதைக் குறித்து ஒன்றும் கேட்கவுமில்லை. மாறாக, இச்சம்பவம் தங்களுள் ஏதோ உயர்ந்த **பா**வங்களை எழுப்பியிருக்கின்றது. அதன் அடையாளம் தங்கள் முகத்தில் நன்றாக தெரிந்தது. இதைப் பற்றி சற்று விளக்குமாறு தங்களிடம் நான் பிரார்த்திக்கின்றேன்!'' என்றார்.

மஹாராஜா சிரித்தவாறே, ''ராதாரமணரே! வந்தது வானரம் அல்ல. ஒரு சாது. அவரே வானர ரூபத்தில் வந்து எனக்கு ஒரு நல்ல பாடம் கற்பித்தார். பணிவைத்தான் அவர் இச்சம்பவத்தினால் எனக்குக் கற்பித்தார். பிருந்தாவன யாத்திரையினால் எனக்கு ஏதாவது நன்மை ஏற்படவேண்டுமானால், நான் இங்கு ஒரு மஹாராஜா என்ற தோரணையுடன், பெரிய ஆட்படையுடன் மற்றும் உயர்ந்த பொருட்களுடன் வரக்கூடாது என்பதையே அந்த மஹாத்மா பொன்னாடையை கிழித்து எறிந்ததன் மூலம் எனக்கு

விளக்கினார். இங்கு ஒரு சாதாரண பக்தனாகவே வரவேண்டும். உயிர் வாழ்வதற்கும் பஜனை செய்வதற்கும் வேண்டியளவு அவசியமான பொருட்களையே வைத்திருக்கவேண்டும். இப்பாடத்தை புகட்டிய அந்த வானரத்தைப் பார்த்து என் இதயம் நன்றியினால் நிரம்பியது. அதன் வெளிப்பாடே என் கண்களில் கண்ணீராக தோன்றின. இனி பருந்தாவனம் வரும்பொழுதெல்லாம் என்னுளிருக்கும் மஹாராஜாவை விட்டுவிட்டே வருவேன்'' என்றார்.

ராதாரமணர், இப்பதிலைக்கேட்டு நெகிழ்ந்தார். அவருக்கு புதியத் தெளிவு ஏற்பட்டது. அவருடைய கர்வம் அடங்கியது. வைஷ்ணவர்களிடம் அவருக்கிருந்த காரணமற்ற வெறுப்பும் அகன்றது. மயக்கம் கொண்டவர்போல் காணப்பட்டார் அவர். ராதாரமணரின் கர்வத்தையும் முன்னபிப்ராயத்தையும் உணர்ந்திருந்த மஹாராஜா, அதன் வேரிலேயே போட இதைத் தக்க தருணம் என்றெண்ணினார். ''ராதாரமண! உண்மையான வைஷ்ணவனாக இருப்பது மிகவும் கடினம். வைஷ்ணவத்துவத்தின் சாரம் பணிவே ஆகும். மஹாப்ரபு, பணிவின் ஒரு அவதாரமாகவே அல்லவா இருந்தார். மழைத் தண்ணீர் பள்ளத்தை நோக்கியே ஓடுவதைப் போல் பகவானின் கிருபை பணிவானவர்களிடமே வேகமாக ஓடி வரும் என்பதை உணர்த்தவே அவர் அவதரித்தாரல்லவா! கர்வமெனும் மலைமேல் ஏறி நிற்பவர்களை கருணையெனும் ஓடம் தொடவே தொடாது. நான் ஒரு மஹாராஜா. என்னுடைய கர்வத்திற்கோ ஒரு எல்லையேயில்லை. என்னைப் போன்ற ஒருவனிடமும் பகவான் கருணை புரிவானா? என்று நான் மிகவும் அஞ்சுகிறேன்!'' என்று கூறிய மஹாராஜாவின் கண்கள் பனித்தன.

'பணிவு ஒரு தெய்வீகமான இயல்பு. பணிவு இல்லாமல் ஒருவரால் ஆன்மீகத்தில் முன்னேறவே முடியாது' என்று இதுவரை பலர் ராதாரமண கோஷிடம் எடுத்துக் கூற முயன்றிருந்தார்கள். ஆனால், அவர்களால், ராதாரமணருக்கு இதைப் புரிய வைக்க முடியவில்லை. ஆனால், பணிவின் உதாரணமாக வாழும் மஹாராஜாவைக் கண்டதும் அவர் பாதிக்கப்பட்டார். சமநோக்கு, சரணாகதி மற்றும் அஹங்காரமின்மை - இம்மூன்றும், ஒருவன் பகவத் கிருபையை பெறுவதற்கு மிகவும் அவசியம் - இம்மூன்றுமே பணிவினால்தான் ஏற்படும் என்பதை ராதாரமணர் உணர்ந்தார்.

பணிவு ஒரு ஆத்மகுணம் என்பதையும், பணிவை வலியுறுத்தும் சைதன்யரின் மதமே சிறந்த மதமென்பதையும் அவர் புரிந்துக் கொண்டார். சைதன்ய சம்ப்ரதாயத்தில் வைஷ்ணவ தீக்ஷைப் பெற்று சைதன்யர் கூறிய பக்திமார்க்கத்தில் பிரவேசித்தார் ராதாரமணர்.

இப்பொழுது ராதாரமணர் முன்புபோல் இல்லை. தன் நற்குணங்களில் தற்பெருமையும், வினயம் என்பதை ஏளனமாகவும், வைஷ்ணவர்களை கீழ்த்தரமாகவும் பார்த்த அந்த ராதாரமணர் இப்பொழுது தானே பணிவின் ஸ்வரூபமாகவே மாறிவிட்டார். பகவானின் காட்சியை பெறுவதற்கு மிகவும் ஏங்கினார். மனத் தூய்மையே பகவத் தரிசனத்திற்கு அவசியம் என்ற சாஸ்திரத்தின் கூற்று உண்மையென்றால் இப்பொழுது அவருக்கு பகவத் தரிசனம் பெறுவதற்கான எல்லாத் தகுதியும் வந்துவிட்டன. ஏனெனில், தற்பெருமை மற்றும் முன்னபிப்ராயம் (Prejudice) - இவை இரண்டு மட்டுமே அவரிடம் இருந்த சித்தமலங்கள். அவை இப்பொழுது முழுவதும் நீங்கிவிட்டன. பகவான் இவருக்கு மிகவும் புதுமையாக ஒரு தரிசனத்தை தந்தருளினான்.

**(தொடரும்)**




ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ பண்டரீபுர யாத்திரை

**தேதி : 7-6-08 முதல் 12-6-08 வரை**

பண்டரீபுரத்தில் அருள் பாலிக்கும் ஸ்ரீ பாண்டுரங்கனின் அருளைப் பெற்று அனைவரும் உய்யவேண்டும் என்ற ஸ்ரீ ஸ்வாமிஜியின் பெருங்கருணையினால் பண்டரீபுர யாத்திரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாத்திரையில் பங்கு கொள்ளும் அனைவரும் 9-6-2008 விடியற்காலைக்குள் சோளாபூர் வந்து சேர்ந்துவிட வேண்டும். தாமதமாக வருபவர்களுக்கு தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய இயலாது.

கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் கலந்துகொள்ளலாம். இந்த யாத்திரையில், ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொள்ளவில்லை.

தொடர்பு கொள்ள வேண்டிய பொறுப்பாளர் : **திரு. ரவி**

தொலைபேசி : 09444524451

# அக்ஷரமணமாலை

## *(ஸ்ரீ ஸ்வாமிஜியின் உரைகளிலிருந்து-145)*

*நெக்கு நெக்குருகியான் புக்கிட உனைப்புக*
*நக்கனா நின்றனை அருணாசலா*

'நெக்கு நெக்குருகி' - பக்தர்கள் பலவித **'பா'**வங்களில் பகவானை நோக்கி கதறி அழுது இருக்கின்றனர். பக்தர்கள் பகவானை சகுண ரூபமாக தியானித்து, கதறி அழுது பாடுகின்றனர். உயர்ந்த **'பா**வ' நிலைககளில் செல்கையில், பல பக்தர்களுக்கு **'பா**வ' சமாதியே ஏற்பட்டுவிடும். பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸரின் சரித்திரங்களில் இந்த நிலை அவருக்கு ஏற்படுவதைக் காணலாம். ஆயினும், இத்தகைய **'பா**வ'சமாதி என்னும் உயர்ந்த அனுபவம், பக்குவம் இருந்தால் அன்றி ஏற்படாது. பக்குவம் இல்லாமல் ஒருவருக்கு ஏற்பட்டுவிட்டால், உடலால் அதைத் தாங்க முடியாது.

பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், சமாதியில் இருக்கும்பொழுது பார்த்தால், அவர் ஒரு பெரிய ஆனந்த நிலையில் திளைத்து இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரியும். அவர் அடிக்கடி, இப்படி **'பா**வ'சமாதியில் செல்வது வழக்கம். இதைக் காணும் பக்தர்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும்.

பரமஹம்ஸருடன் கூடவே வாழ்ந்தவர் மதுர்பாபு. அவர் பரமஹம்ஸருடன் உரிமையுடன் பேசக் கூடியவர். மிகுந்த அன்பு கொண்டவர். தனது குருமகராஜிற்காக எதையும் செய்துகொடுக்கக் கூடியவர். பரமஹம்ஸரும் அவரிடம் மிகுந்த அன்பு காட்டி வருவார்.

பரமஹம்ஸர் அடிக்கடி **'பா**வ' சமாதியில் சென்று திளைப்பதைக் கண்ட மதுர்பாபு, குருமகராஜிடம், ''மகராஜ், தாங்கள் அனுபவிக்கும் இந்த **பா**வநிலையை எனக்கும் தாருங்கள்'' எனக் கேட்டார். மதுர்பாபுவிற்கு, அந்த பக்குவம் தனக்கில்லை எனத் தெரியும். இருப்பினும் குருமகராஜின் முகத்தில் அத்தகைய சமாதியில் ஏற்படும் ஆனந்தத்தைப் பார்க்கும்பொழுது, அதை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையினால் கேட்டார்.

பரமஹம்ஸர் அந்த நிலையின் அனுபவம் மதுர்பாபுவிற்கு வேண்டாம், தேவையில்லை என சொல்லிப் பார்த்தார். மதுர்பாபு கேட்பதாக இல்லை. மதுர்பாபு பிடிவாதம் செய்ததால், பரமஹம்ஸர், ''நீ வீட்டிற்குச் செல். **நான் காளியிடம் பிரார்த்தனை செய்கிறேன். காளி நினைத்தால் கொடுப்பாள்''** என்று சொல்லி மதுர்பாபுவை அனுப்பிவிட்டார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அனுக்ரஹ பலத்தினாலும், காளியிடம் அவர் செய்த பிரார்த்தனையினாலும், மதுர்பாபுவிற்கு **'பா**வ' சமாதி சித்தித்துவிட்டது. ஆயினும், அதை அவரால் தாங்க முடியவில்லை. அவரைப் பார்க்க வந்த அனைவரிடமும், சொல்லி அனுப்பி, ராமக்ருஷ்ணரிடம் தனக்கு உள்ள **'பா**வ'சமாதி நிலையை நீக்கிவிட வேண்டுமென பிரார்த்தித்து வந்தார். அதுபோலவே, ஸ்ரீ ராமக்ருஷ்ணரும் காளியிடம் பிரார்த்திக்க, 2-3 நாட்களில் மதுர்பாபுவிற்கு சாதாரண நிலை திரும்பி வந்தது.

இயல்பு நிலை வந்தவுடன் மதுர்பாபு, ''அப்பாடா! இப்பொழுதுதான் நிம்மதியாக இருக்கிறது. 2-3 நாட்களாக என்னால் பகவத் விஷயத்தை தவிர எதையும் சிந்திக்க முடியவில்லை. ஏதோ ஒரு பூதம் வந்து உடலினுள் உட்கார்ந்தது போலிருந்தது. விட்டால் போதும் என்றிருந்தது. இப்பொழுதுதான், அது விட்டது போலிருக்கிறது'' என்றார். மேலும், ''இந்த நிலை, மறுபடி எனக்கு வேண்டவே வேண்டாம். இந்த நிலை எல்லாம் உங்களுக்கே இருக்கட்டும். உலக விஷயங்களில் ஈடுபடவே முடியவில்லை. எனக்கு அந்த பக்குவமில்லை'' என ஸ்ரீ ராமக்ருஷ்ணரிடம் போய் சொன்னார். உடலும், மனமும் பக்குவமடையாவிடின், அனுபவம் ஏற்படாது. ஏற்பட்டாலும், அனுபவிக்க முடியாது.

அனுபவமானது இதயத்தில் உள்ள வாசனைகள் அழிந்தால்தான் ஏற்படும். உள்ளத்தில் உள்ள அழுக்கானது பிரார்த்தனையினால் தான் அழியும். பக்தி என்பது ஒரு செயலோ அல்லது ஒரு தெரிவித்தலோ அல்ல. பகவானிடம் சொல்வது என்பதல்ல இது (Not an information or act).

ஒரு சிறு குழந்தை விளையாடப் போவதாக தெரிவிப்பது என்பது ஒன்று. விளையாட வேண்டும் என அடம்பிடித்து அழுவது என்பது வேறு. அதுபோல், பகவானை நோக்கி, கதறி அழுது, பிரார்த்தித்தால்தான், பகவானின் கருணையால் ஹிருதயத்தில் உள்ள மலங்கள் அழியும். வேறு வழியே கிடையாது. மனம் உருகாவிடில் அனுபவம் ஏற்படவே ஏற்படாது.

(இங்கு) இப்படி, 'நெக்கு நெக்குருகியான்' - கதறி அழுது, அருணாசலனை பிரார்த்திப்பதாக கூறுகிறார் ரமண மஹரிஷிகள். ''அப்படி கதறி அழுது, உன்னை வந்தடையும்பொழுது, உனக்கும் என்னைப்போல், நாமரூபங்கள் உண்டு என எண்ணி வந்தேன். ஆயின், உன்னை நெருங்கி, அனுபவம் ஏற்படும்பொழுது பார்த்தால், நீயோ எங்கும் நிறைந்திருக்கும் பிரும்மஸ்வரூபமாக இருக்கிறாய். உனக்கு காலும் இல்லை, தலையுமில்லை. பேரும் இல்லை, ஊருமில்லை. நக்கனா நின்றனை அருணாசலா'' என்கிறார் பகவான் ரமண மஹரிஷிகள்.

**(தொடரும்)**

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83
Telephone : 044-24895875, email ID : contact@madhuramurali.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

மதுரமுரளி - பாரதத்தின் அனைத்து பிரதான மொழிகளிலும் வெளிவர இருக்கின்றது.
முதல் பிரதி தெலுங்கில் வெளியாகியுள்ளது.
தொடர்புக்கு :
Smt. Sri Latha Ravichandran, 040 - 2339 2758

***Living with a Saint is entirely different from hearing about a Saint***

- Sri Swamiji

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சி நிரல்

| தேதி/நேரம் | நிகழ்ச்சி நிரல் |
|---|---|
| 01-05-2008<br>காலை | ஏகாதசி<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 05-05-2008 முதல்<br>11-05-2008 வரை<br>இரவு 7-9 | ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம்<br>இடம் : ஸ்ரீ நவநீத க்ருஷ்ணன் கோவில்,<br>தஞ்சாவூர் தொடர்புக்கு : 98942 41620 |
| 12-05-2008 முதல்<br>18-05-2008 வரை<br>மாலை | **ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்**<br>**இடம் : ஆலங்குடி பெரியவர்கள்**<br>**அதிஷ்டானம், முடிகொண்டான்** |
| 22-05-2008 மாலை | அருளுரை, இடம் : புள்ளலூர் |
| 24-05-2008<br>மாலை 6-8 | அருளுரை,<br>இடம்: பாபநாயக்கன் பாளையம்,<br>கோயமுத்தூர் |
| 25-05-2008 | வேலூர் |
| 27-05-2008 முதல்<br>02-06-2008 வரை | மஹிளா ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்<br>இடம் : குருவாயூர்<br>தொடர்புக்கு : 09388009909 |
| 31-05-2008<br>காலை | ஏகாதசி,<br>இடம் : மதுரபுரி ஆஸ்ரமம் |
| 15-06-2008 முதல்<br>21-06-2008 வரை | உத்தயாஸ்தமன ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்<br>இடம் : அயோத்யா அஸ்வமேத மஹா<br>மண்டபம், மேற்கு மாம்பலம், சென்னை-33.<br>தொடர்புக்கு : 09282145174 |
| 22-06-2008 | மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை,<br>இடம் : கெங்குவார்பட்டி<br>தொடர்புக்கு : 09994280631 |

**மங்களானிபவந்து**